

தமிழ் இலக்கியம் - இலக்கியக் காலப்பகுதி, இலக்கிய இயக்கம், இலக்கிய வகைமை என்ற முப்பரிமாணங்களில் குறிப்பிட்ட கருத்துக்கள், மரபுகள், தரநிலைகள் பரந்து வளர்ந்து ஆளுமை செலுத்தினால் அது ஓர் இலக்கிய இயக்கம் எனப்படும். இந்நூலில் முனைவர் உ.கருப்பத்தேவன் செவ்வியல் முதல் கலை வாழ்க்கைக்காகவே எனும் இலக்கிய இயக்கம் வரை இருபதுக்கும் மேற்பட்ட இலக்கிய இயக்கங்களையும் இலக்கியக் கொள்கைகளையும் விளக்கிக் காட்டியதோடு நில்லாமல் அவற்றின் பயன்பாட்டைப் பற்றியும், இலக்கிய இயக்கங்களின் வரலாற்றைச் சுட்டும் கைகாட்டியாகவும் மாணவர்கள் எளிமையாக அறிந்துகொள்ளும் நோக்கத்தில் இந்நூலை உருவாக்கியுள்ளார்.

- பேரா. முனைவர் இ.கி.இராமசாமி

மேலை இலக்கியத் தாக்கத்தினால் உலக நாடுகளின் படைப்பிலக்கியத்தை அதன் நோக்கத்தை அடியொற்றி, இலக்கிய ஆர்வலர்களும் வாசகர்களும் எப்படிப் படித்துச் சுவைக்க வேண்டும் என எடுத்துக்காட்டும் முறையில் தோன்றியதே 'இலக்கியத் திறனாய்வு'த் துறையாகும். இந்நூல் படைப்பிலக்கியத்தைத் திறனாய்ந்து அதன் உட்பொருள் விளக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இதுவரை தமிழில் வெளிவந்துள்ள இலக்கிய இயக்கங்கள் குறித்த நூல்கள், இலக்கிய இயக்கங்களின் வரலாற்றினையே எடுத்துரைக்கின்றன. இலக்கிய இயக்கங்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டவில்லை. இதனை உணர்ந்த இந்நூலாசிரியர், இலக்கிய இயக்கங்களின் கொள்கைகளை முதலில் சுட்டி, அதன் பின்னர் அவ்வியக்கங்களின் வரலாற்றினைக் கூறுகின்றார். தமிழ் இலக்கியப் படைப்புக்களிலிருந்து ஒவ்வொரு இலக்கிய இயக்கத்திற்கும் தக்க உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

- முனைவர் நா.நாகலிங்கம்

மீனாட்சி பதிப்பகம்
2/304, இராதாகிருஷ்ணன் தெரு,
நாராயணபுரம், மதுரை - 625 014.

ISBN: 978-81-907706-5-1

இலக்கிய இயக்கங்கள் - அறிமுகம்

உ.கருப்பத்தேவன்



# இலக்கிய இயக்கங்கள் - அறிமுகம்

முனைவர் உ.கருப்பத்தேவன்

# இலக்கிய இயக்கங்கள் - அறிமுகம்

**(An Introduction of Literary Movements)**

முனைவர் உ.கருப்பத்தேவன்

முதல்பதிப்பு : டிசம்பர் 2017 •

பக்கம்: 206 • அளவு: 1x8 டெம்மி

கணினி: பி.கி.ராம்குமார்

அச்சு: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ் & ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை.

ISBN: 978-81-9077-06-5-

வெளியீடு:

மீனாட்சி பதிப்பகம்

2/304, இராதாகிருஷ்ணன் தெரு, நாராயணபுரம்,

மதுரை - 625 014.

விலை: ரூ. 150.00

## தந்துரை

**பேரா.முனைவர் இ.கி.இராமசாமி**
**மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்**
**தமிழ் உயராய்வு மையம்,**
**யாதவர் இருபாலர் கல்லூரி,**
**மதுரை - 14**

பேரா. முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்கள் முன்னர் (2007) இலக்கிய இயக்கங்களும் இலக்கியக் கொள்கைகளும் என்ற தலைப்பில் வெளியிட்ட நூலின் செம்பாதியாக 'இலக்கிய இயக்கங்கள்- அறிமுகம்' என்ற நூல் அமைந்துள்ளது. பாடத்திட்டமும் பாடநூல்களும் மாணவர்களுக்குச் சுமையாக அமைந்துவிடாமல் சுவையாகவும் சுருக்கமாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இது மாற்றி எழுதப்பெற்றுள்ளது. இலக்கியத்தைப் பகுத்துக்காட்டும் நெறிகள் மூன்று என்றும், அவை:

- இலக்கியக் காலப் பகுதிகள் (Literary Periods)
- இலக்கிய இயக்கங்கள் (Literary Movements)
- இலக்கிய வகைமைகள் (Literary Genres)

என்றும் கூறுவார் தமிழண்ணல். குறிப்பிட்ட கருத்துக்கள், மரபுகள், தரநிலைகள் பரந்து வளர்ந்து ஆளுமை செலுத்தினால் அது ஓர் இலக்கிய இயக்கம் எனப்படும். மேலைநாட்டார் கொள்கைகளைக் குறிக்கும் 'இசம்' (Ism) என்ற பின்னொட்டைச் சேர்த்து இலக்கிய இயக்கங்களைப் பகுத்துக் காட்டுவர்.

- செவ்வியல் (classism)
- முருகியல் (Aestheticism
- அற்புத நவிற்சியியல் (Romanticism)
- இயற்கையியல் (Naturalism)

என்றவாறு இலக்கிய இயக்கங்கள் நீளுகின்றன. அப்படியான இருபதுக்கும் மேற்பட்ட இயக்கங்களை விளக்கிச் செல்லும் அரிய நூல் இது. இந்த நூலின் முதற்பதிப்புக்கு (2007) தமிழறிஞர்களான முனைவர் அதட்சிணாமூர்த்தி, முனைவர் இரா.மோகன், பேரா.இராபாலச்சந்திரன் என்ற 'பாலா'